நகர் ஊரமைப்பு இயக்குநரகம்
807, அண்ணா சாலை, சென்னை-2

## தேர்வு அறிவிக்கை

தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சார்நிலைப் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ள அளவர்/உதவி வரைவாளர் பதவிக்கு 2013-2014-ம் ஆண்டுக்கான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்க 04.07.2015 நாளிட்ட இவ்வலுவலகத் தேர்வு அறிவிக்கையில் 27.07.2015 வரை கால அவகாசம் அறிவிக்கப்பட்டது. இதனை மேலும் 07.08.2015 வரை நீட்டித்துக் கால அவகாசம் அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சார்நிலைப் பணிகளில் சேர்க்கப்பட்டுள்ள அளவர்/உதவி வரைவாளர் பணியிடம் நிரப்பிடும் பொருட்டு இத்தேர்வு அறிவிக்கைக்கு முன்னரே விண்ணப்பம் செய்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவை இல்லை. இத்தேர்வு அறிவிக்கையின்படி அவர்கள் விண்ணப்பம் தகுதி பெறுமாயின், எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர. தற்போது அரசால், சிறப்பு விதியில், பயிற்சியாளர் சட்டம் 1961-ன்படி தேசிய வேலை பழகுநர் சான்றிதழ் ஒரு வருட கால பயிற்சி பெறுவதைத் தளர்வு செய்துள்ளது. இதன்படி அளவர்/உதவி வரைவாளர் காலிப் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்க 28 டிசம்பர் 2015 பிற்பகல் 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | பணி அமைப்பு | ஊதியம் | காலியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அளவர்/உதவி வரைவாளர் | தமிழ்நாடு நகர்ஊரமைப்புத்துறை சார்நிலை பணிகள் | ₹5200-20200+ 2400 (தர ஊதியம்) | 98 |

**2. காலியிட ஒதுக்கீடு :**

இனவழிச் சுழற்சி விதிகளின்படி கீழ்க்கண்டவாறு காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

| பொது | | | | | | | பி. | | | | | | | பி.மு. | | மி.பி./சீ.ம | | | | | | | ஆ.தி. | | | | | | ஆ.தி. (அ.) | | | ப. | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொது | ம | ஆ.வி. | த.க.ப. | (ம)த.க.ப. | மா.தி | மு.ரா. | பொது | ம | ஆ.வி. | த.க.ப. | (ம)த.க.ப. | (மா.தி)த.க.ப. | மு.ரா. | பொது | ஆ.வி. | பொது | ம | ஆ.வி | த.க.ப. | (ம)த.க.ப. | மா.தி | மு.ரா. | பொது | ம | ஆ.வி. | த.க.ப. | (ம)த.க.ப. | மு.ரா. | பொது | த.க.ப. | (ஆ.வி.)த.க.ப. | த.க.ப. | மொத்தம் |
| 14 | 6 | 1 | 4 | 2 | 1 | 2 | 14 | 6 | 1 | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 9 | 4 | 1 | 3 | 1 | 1 | 1 | 7 | 3 | 1 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 98 |
| 30 | | | | | | | 26 | | | | | | | 3 | | 20 | | | | | | | 15 | | | | | | 3 | | | 1 | 98 |

**சுருக்கவிளக்கம்:** பி.-பிற்படுத்தப்பட்டோர், பி.மு.-பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள், மி.பி./சீ.ம.-மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், ஆ.தி.-ஆதி திராவிடர், ஆ.தி.(அ)-ஆதி திராவிடர்(அருந்ததியர்), ப.-பழங்குடியினர், ம.-மகளிர்,

ஆ.வி.-ஆதரவற்ற விதவை, த.க.ப.-தமிழ்வழியில் கல்வி பயின்றோர், மு.ரா.-முன்னாள் ராணுவத்தினர், மா.தி.-மாற்றுத் திறனாளி.

**3. தகுதிகள்:**

**அ) வயது வரம்பு: (01.07.2015 அன்றைய தேதியில்)**

| குறைந்தபட்ச வயது (முடிவுற்று இருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (முடிவுறாது இருக்க வேண்டும் | |
|---|---|---|
| | ஆ.தி, ஆ.தி(அ), ப., மி.பி./சீ.ம., பி., பி.மு., மற்றும் அனைத்து வகுப்பு ஆ.வி. | இதர வகுப்பினர் (ஆ.தி, ஆ.தி(அ), ப. , மி.பி./சீ.ம., பி., பி.மு. மற்றும் அனைத்து வகுப்பு ஆ.வி. அல்லாதவர்கள்) |
| 18 ஆண்டுகள் | 35 ஆண்டுகள் | 30 ஆண்டுகள் |

**குறிப்பு:** ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர்(அருந்ததியினர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர், பிற்படுத்தபட்டோர், பிற்படுத்தபட்டோர் முஸ்லீம்கள் ஆகிய பிரிவினர் அல்லாதோர் மாநில அரசிலோ அல்லது மைய அரசிலோ 5 வருடப் பணி அல்லது அதற்குக் கூடுதலான பணியை முடித்திருப்பின் மேற்குறிப்பிட்ட வயதுத் தகுதியைப் பெற்றிருந்தாலும் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள்.

**கல்வித் தகுதி**

விண்ணப்பதாரர் 01.07.2015 அன்றைய நிலையில் கீழ்க்கண்டவற்றுள் ஏதாவதொரு கல்வித்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும்.

அ. இந்திய அரசு, தொழிலாளர் அமைச்சகத்தால் நடத்தப்படும் வரைவாளர்(சிவில்) என்ற பிரிவில் 1952-ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட திருத்திய பாடத் திட்டத்தில் தேர்ச்சி; அல்லது

ஆ. தலைவர், தொழில்நுட்ப தேர்வு வாரியம், மெட்ராஸ் பொறியியல் குழுமம் மற்றும் மையம் அவர்களால் ராணுவப் பணி வரைவாளர் (களம்)-ற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்; அல்லது

இ. கைவினைஞர் பயிற்சி மையத்திலிருந்து வழங்கப்பட்ட வரைவாளர் (சிவில்) சான்றிதழ்; அல்லது

ஈ. இந்திய அரசின் தொழில் (Vocational) பணிக்கான பயிற்சிக்காக தேசிய கவுன்சில் தொழிற் பயிற்சி நிலையம் மூலம் வழங்கும் வரைவாளர் (சிவில்) பணி அல்லது அளவர் பணிக்கான தேசியப் பணிச் சான்றிதழ்.

**4. பொதுவான தகவல்**

அ. பணியிடங்களை நிரப்ப இனவழிச் சுழற்சி விதிகள் கடைப்பிடிக்கப்படுகிறது. காலிப்பணியிட ஒதுக்கீடு தற்போதுள்ள விதிகளின்படி அமைகிறது.

ஆ. அரசாணை நிலை எண்.145 பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்(S)துறை, நாள் 30.09.2010-ல் நேரடி நியமனத்திற்குரிய காலிப்பணியிடங்களில், 20 சதவிகித காலிப் பணியிடங்களை முன்னுரிமை அடிப்படையில் தமிழ்மொழியில் கல்வி பயின்றவர்களைக் கொண்டு நிரப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த 20 சதவிகித தமிழ்வழியில் கற்றவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலான ஒதுக்கீடு இப்பணி நியமனத்தில் கடைப்பிடிக்கப்படும். இப்பணி நியமனத்திற்கான பதவிக்கு

நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ் மொழி மூலம் பயின்ற விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே மேற்கூறிய இடஒதுக்கீடு பொருந்துவதாகும். இந்தத் தமிழ்வழிக் கல்வி இட ஒதுக்கீட்டின் கீழ் பயனடைய விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் பயின்ற கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியைத் தமிழ்வழியில் பயின்று பெற்றார் என்பதற்கான சான்று பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். www.dtcpexam.com என்ற இணையதளத்தில் இதற்கென வெளியிடப்பட்டுள்ள படிவத்தின்படி தமிழ்வழியில் பயின்றதற்கான சான்று இருத்தல் வேண்டும். தமிழ்வழிக் கல்வியில் பயின்றோர்க்கு அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப தேர்வு செய்வதற்கான தகுதியான விண்ணப்பதாரர்கள் கிடைக்காத பட்சத்தில் தமிழ்வழியில் பயிலாத தகுதியான சம்பந்தப்பட்ட இனப்பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்களைக் கொண்டு அக்காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

இ. ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் ராணுவத்தினருக்கான ஒதுக்கீடும் இந்தப் பணி நியனத்தில் கடைப்பிடிக்கப்படும்.

ஈ. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை தோரயமானதேயாகும். இது வாய்மொழித் தேர்வுக்கு அல்லது பணி நியமனத்திற்கு முன்னதாக எந்நேரத்திலும் மாற்றம் செய்வதற்கு உட்பட்டதாகும்.

உ. மகளிருக்கென்று ஒதுக்கப்பட்ட பிரிவுகளில் தகுதியான மகளிர் விண்ணப்பதாரர் இல்லாத பட்சத்தில் அதே இனப்பிரிவு சார்ந்த இட ஒதுக்கீட்டில் உள்ள ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

ஊ. **உடற்தகுதிச் சான்று**: பணி நியமனம் செய்ய தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நிர்வாகப் பதவிகள் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப் பணிகள்/தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணிகள்/தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி போன்ற பதவிகள் தவிர இதர பதவிகளுக்குரிய படிவத்திலான உடற்தகுதிச் சான்றும் பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பதவிக்குப் பார்வைத் திறனைப் பொறுத்தமட்டில் தரம்-III அல்லது அதற்கும் நல்லதான பார்வைத் தரம் வரையறுக்கப்படுகிறது.

| பார்வை விவரம் | நல்ல பார்வைத்திறன் | | குறைவான பார்வைத் திறன் |
|---|---|---|---|
| கண்ணாடியில்லாமல் தூரப்பார்வை | 6/9 | அல்லது | 6/9 |
| கண்ணாடியணிந்து தூரப்பார்வை | 6/6 | | 6/12 |

பார்வைத் திறன் குறைபாடு உள்ள விண்ணப்பதாரர்கள் தகுதியான கண் சிறப்பு மருத்துவரிடம் பார்வைத் தகுதிச் சான்று பெற்றுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. மாற்றுத் திறனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டால் பதவிக்குரிய பணியைத் திறம்பட செயல்படுத்துவதில் ஊனம் எவ்வகையிலும் தடையாக இருக்காது என்பதற்கு மாற்றுத் திறனாளிகள் மருத்துவ வாரியத்திடமிருந்து (Medical Board) உடற்தகுதிச் சான்று பெற்று பணி நியமனத்திற்கு முன்னதாகச் சமர்ப்பித்தல் வேண்டும். மூன்று வகையான

மாற்றுத் திறனாளிகளில் கை, கால் ஊனமுற்றோர் மட்டுமே மாற்றுத் திறனாளிகளுக்கான 3 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் உள்ள காலிப் பணியிடங்களில் நிரப்பத் தகுதியானவர்கள் ஆவார்கள்.

ஏ. தமிழ்நாடு அரசு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள் இந்நியமனத்திற்குப் பொருந்தும்.

**5. எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை மற்றும் வரைபடத்திறன்) மற்றும் வாய்மொழித் தேர்வு குறித்த விவரம்:**

| பாடத்திட்டம் | அதிகபட்ச மதிப்பெண் | கால அளவு |
|---|---|---|
| அ) கீழ்க்கண்டவற்றில் ஏதேனும் ஒன்று:<br>1. ஐடிஐ அளவர் (அல்லது)<br>2. ஐடிஐ வரைவாளர் (சிவில்) | 60 | 90 நிமிடங்கள் |
| ஆ) வரைபடத் திறன் | 25 | 30 நிமிடங்கள் |
| இ) வாய்மொழித் தேர்வு | 15 | - |
| மொத்தம் | 100 | - |

**குறிப்பு:**

அ. எழுத்துத் தேர்வுக்கான வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும்.

ஆ. ஐடிஐ அளவர் அல்லது ஐடிஐ வரைவாளர் ஆகியவற்றில் எந்த விருப்பப் பாடத்தில் விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்புகிறார் என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

இ. விண்ணப்பதாரர் தேர்வு செய்யும் விருப்பப்பாடத்தில் ஐடிஐ கல்வித்தரத்தில் தேர்வு வினாக்கள் அமையும்

**6. தேர்வு மையங்கள்**

| வ.எண் | தேர்வு மையம் |
|---|---|
| 1 | சென்னை |
| 2 | கோயம்புத்தூர் |
| 3 | மதுரை |
| 4 | திருச்சிராப்பள்ளி |

**குறிப்பு:**

அ. தேர்வு எழுதுவதற்கு மேற்கண்ட தேர்வு மையங்களில் ஏதேனும் ஒன்றை விண்ணப்பதாரர்களே தேர்வு செய்து கொள்ளலாம். தேர்வு சம்பந்தமான செலவுத் தொகை ஏதும் துறையால் வழங்க இயலாது.

ஆ. தேர்வு மையத்தை மாற்றித் தரக் கோர இயலாது.

இ. தேர்வு மையத்தின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ, குறைக்கவோ மற்றும் விண்ணப்பதாரர்களுக்கு வேறு தேர்வு மையங்களை மாற்றி ஒதுக்கவோ நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2 அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

ஈ. வாய்மொழித் தேர்வு சென்னையில் நடைபெறும்.

உ. எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

ஊ. வாய்மொழித் தேர்வுக்குத் தேர்வு செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கை 1:5 என்ற விகிதத்தில் அமையும் (அதாவது ஒரு காலிப் பணியிடத்திற்கு 5 விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு இனப்பிரிவிலிருந்தும் மதிப்பெண் தரவரிசையின்படி அழைக்கப்படுவர்). வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்பட்டும் ஆஜராகாத விண்ணப்பதாரர் இறுதியாகத் தேர்வு செய்வதற்கு தகுதியற்றவராவார்.

## 7. தேர்வு செய்யும் முறை

தேர்வு செய்யும் முறை இரு கட்டங்களாக நடைபெறும். அதாவது,

அ. எழுத்துத் தேர்வு (கொள்குறி வகை மற்றும் வரைபடத் திறன்).

ஆ. வாய்மொழித் தேர்வு என்பது நேர்முகத் தேர்வாக நடைபெறும்.

இ. எழுத்துத் தேர்வுக்கான (கொள்குறி வகைக் கேள்விகள்) குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண்கள் 15 ஆகும். 15 மதிப்பெண்களுக்குக் குறைவாகப் பெற்றவர்கள் தேர்ச்சி பெறாதவர்களாகக் கருதப்பட்டு(Failed) அவர்களது வரைபடத் திறன் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. மேலும், அவர்கள் வாய்மொழித் தேர்வில் பங்கேற்கும் தகுதியையும் இழக்க நேரிடும்.

ஈ. எழுத்துத் தேர்வு (கொள்குறிவகை மற்றும் வரைபடத் திறன் தேர்வு உட்பட) மற்றும் வாய்மொழித் தேர்வில் பெற்ற மொத்த மதிப்பெண்களின்படி இனவழிச் சுழற்சி ஒதுக்கீடு விதிகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் இறுதியாகத் தேர்வு செய்யப்படுவர்.

## 8. விண்ணப்பக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 1 | அளவர்/உதவி வரைவாளர் | ₹300/- (ரூபாய் முந்நூறு மட்டும்) |

தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஓர் வங்கியில் **"The Director of Town and Country Planning, Chennai"** என்ற பெயருக்குக் கேட்பு வரைவோலை மூலமாக மட்டுமே தேர்வுக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

## 9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய நடைமுறைகள்:

www.dtcpexam.com என்ற இணைய தளத்தில் விண்ணப்பப் படிவம் வெளியிடப்பட்டுள்ளது. அவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து இணையத்தின் வாயிலாக அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் விண்ணப்பதாரரின் கடவுச்சீட்டு அளவு வண்ணப் புகைப்படம் மற்றும் மாதிரிக் கையொப்பத்தினை (specimen signature)யும் இணையத்தின் வாயிலாக அனுப்ப வேண்டும். அவ்வாறு இணையத்தின் வாயிலாக விண்ணப்பிக்கும்போது ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனிப்பட்ட உபயோகிப்பாளர் பெயர்(user name) மற்றும் ரகசிய குறியீடு(Password) வழங்கப்படும். இவற்றைக் கொண்டு விண்ணப்பதாரர்கள் இணையதளத்தினைப் பயன்படுத்தலாம். இணையத்தின் வாயிலாக அனுப்பப்பட்ட விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து 'பிரின்ட் அவுட்' செய்து அதில் விண்ணப்பதாரர் கையொப்பம் இட்டு **நகர் ஊரமைப்புத் துறை இயக்குநருக்குத் தபாலில்** அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பப்படும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் தேவையான அனைத்துச் சான்றிதழ் நகல்கள் (கல்வித் தகுதி,

அனுபவச் சான்றிதழ்கள்) சுய சான்றொப்பம் செய்து தேர்வுக்கட்டணத்துக்கான கேட்பு வரைவோலையோடு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**“நகர் ஊரமைப்பு இயக்குநர், நான்காவது தளம், பி.டி.லீ செங்கல்வராய நாயக்கர் கட்டிடம், 807, அண்ணா சாலை, சென்னை-2”**

மூலச் சான்றிதழ்கள் (Original Certificates)-ஐ அனுப்பக் கூடாது. கீழ்க்காணும் சான்றிதழ்களைச் சுய சான்றொப்பம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் இணைத்துத் தபாலில் அனுப்ப வேண்டும்.

1. பத்தாம் வகுப்பு(SSLC) மதிப்பெண் பட்டியல்
2. சாதிச் சான்றிதழ்
3. மாற்றுச் சான்றிதழ்.
4. இறுதியாக கல்வி பயின்ற கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட நடத்தைச் சான்றிதழ்.
5. கீழ்க்காணும் கல்வித்தகுதிச் சான்றிதழ்களில் ஏதேனும் ஒன்று:
   - அ. இந்திய அரசு, தொழிலாளர் அமைச்சகத்தால் நடத்தப்படும் வரைவாளர்(சிவில்) என்ற பிரிவில் 1952-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட திருத்திய பாடத் திட்டத்தில் தேர்ச்சி; அல்லது
   - ஆ. தலைவர், தொழில்நுட்ப தேர்வு வாரியம் மெட்ராஸ் பொறியியல் குழுமம் மற்றும் மையம் அவர்களால் ராணுவப் பணி வரைவாளர் (களம்)-ற்கு வழங்கப்பட்ட சான்றிதழ்; அல்லது
   - இ. கைவினைஞர் பயிற்சி மையத்திலிருந்து வழங்கப்பட்ட வரைவாளர் (சிவில்) சான்றிதழ்; அல்லது
   - ஈ. இந்திய அரசின் தொழில் (Vocational) பணிக்கான பயிற்சிக்காக தேசிய கவுன்சில் தொழிற் பயிற்சி நிலையம் மூலம் வழங்கும் வரைவாளர் (சிவில்) பணி அல்லது அளவர் பணிக்கான தேசியப் பணிச் சான்றிதழ்.
6. தமிழ்வழிக் கல்வி பயின்றதற்கான சான்று. (மாதிரிப் படிவம் www.dtcpexam.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்).
7. ₹300/-க்கான கேட்பு வரைவோலை (அசல்).
8. அனுபவச் சான்றிதழ், ஏதேனும் இருப்பின்
9. மாற்றுத் திறனாளி/முன்னாள் ராணுவத்தினர்/ஆதரவற்ற விதவை என்பதற்கான உரிய அலுவலரிடம் பெறப்பட்ட சான்றிதழ்.
10. வேலைவாய்ப்புப் பதிவு அட்டை.

**10. தடையின்மைச் சான்று**

இந்திய அரசு அல்லது இந்தியாவின் ஒரு மாநில அரசு அல்லது ஒரு உள்ளாட்சி அல்லது ஒரு பல்கலைக்கழகம் அல்லது ஒரு பகுதி அரசு நிறுவனம் அல்லது ஒரு அரசு சார்பு நிறுவனம் மற்றும் இது போன்ற நிறுவனங்களில் ஏற்கனவே பணிபுரிந்து வரும் (வரன்முறைப்படுத்தப்பட்ட பணி அல்லது தற்காலிகப் பணி) விண்ணப்பதாரர்கள் அவரவர்தம் துறைத் தலைவரின் அல்லது வேலை வழங்குநர் மூலமாக விண்ணப்பத்தை

அனுப்ப வேண்டிய தேவை இல்லை. அதற்குப் பதிலாக அவர்கள் மேற்காண் வகையில் பிற விண்ணப்பதாரர்கள் போன்று நேரடியாக விண்ணப்பித்துவிட்டு, அதனைத் துறைத் தலைவருக்கோ அல்லது வேலை வழங்குநருக்கோ எழுத்து மூலமாகத் தெரிவிக்க வேண்டும். எவ்வாறிருப்பினும், அவர்கள் தங்களின் வேலை வழங்குநரிடமிருந்து தடையின்மைச் சான்று பெற்று வாய்மொழித் தேர்வின் பொழுது சமர்ப்பிக்க வேண்டும். தடையின்மைச் சான்று பெற்ற பின்னர் மற்றும் பணி நியமனம் செய்வதற்கு முன்னர் விண்ணப்பதாரர் மீது ஏதேனும் குற்ற நடவடிக்கை/ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பின் அதனைச் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர் இப்பதவி நியமனத்திற்கான தனது பதிவெண்ணைக் குறிப்பிட்டு நகர் ஊரமைப்புத் துறை இயக்குநருக்கு அந்த உண்மையைக் கட்டாயம் தெரிவிக்க வேண்டும்.

## 11. விண்ணப்பங்கள் தகுதி பெறுதல்:

அ. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் நீல அல்லது கருப்பு நிறப் பந்து முனைப் பேனாவினால் கையொப்பம் இட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கையொப்பம் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஆ. பதிவிறக்கம் செய்து 'பிரின்ட் அவுட்' எடுக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அனைத்து மேற்கூறிய இணைப்புகளுடன் தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம் அல்லது அலுவலக வேலை நேரத்தில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள மூடி முத்திரையிடப்பட்டுள்ள பெட்டியிலும் இடலாம். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 28.12.2015 அன்று பிற்பகல் 5.45 மணி வரை ஆகும்.

## 12. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. <u>தேர்வுக்குக் கட்டாயமாக விண்ணப்பதாரர்கள் கொண்டு வர வேண்டிய உபகரணங்கள்:</u>

   அ. பென்சில், ஆ. ரோட்ரிங் பென், இ. அழிப்பான், ஈ. மினி ட்ராஃப்டர்/டி-ஸ்கொயர், உ. பந்துமுனைப் பேனா(கருப்பு மை), ஊ. ஸ்கேல்/செட் ஸ்கொயர் மற்றும் எ. தேர்வு எழுத்துக்கீழ் அட்டை (Examination Writing Pad)

2. i. எழுத்துத் தேர்வின்போது விண்ணப்பதாரர் தன்னுடன் பேஜர்(Pager), கைபேசி, கால்குலேட்டர் மற்றும் மின்னணு ஞாபகக் குறிப்புகள், புத்தகங்கள், மற்றையவை அல்லது எந்தவொரு மின்னணுக் கருவி அல்லது மின்னணுப் பதிவு இயந்திரம் தனியாகவோ அல்லது விண்ணப்பதாரர் பயன்படுத்தும் கைக்கடிகாரம் அல்லது வளையம் போன்றவற்றின் பகுதியாகவோ உள்ளதைக் கொண்டுவர அனுமதிக்கப்பட மாட்டாது.

   ii. மேற்கண்டவற்றில் ஏதேனும் ஒன்றை விண்ணப்பதாரர்கள் தங்களுடன் வைத்திருப்பது கண்டறியப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வெழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், அவர்களது விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது மற்றும்/அல்லது தேர்விலிருந்து விலக்கி வைக்கப்படுவார்கள். தேவை எனில், அவ்விடத்திலேயே உடல் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுத்தப்படுவார்கள்.

iii. தேர்வு அறைக்குள் புத்தகங்கள், நோட்டுகள், உதிரித் தாள்கள், கணக்கீட்டு log அட்டவணைகள், வரைபட ஸ்டென்சில்கள், ஸ்லைடு ரூல், பாடப்புத்தகங்கள் போன்ற ஏனையவற்றிற்கு அனுமதியில்லை.

iv. விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட அனுமதிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள கைபேசி உள்ளிட்டவற்றைத் தாங்களே முன்வந்து எடுத்து வரவேண்டாம் எனத் தெரிவிக்கப்படுவதுடன் தேர்வு அறைக்கு வெளியில் வைத்திருக்கும் பட்சத்திலும் அவற்றின் பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் உறுதி வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

v. தேர்வாளர்கள் பக்கத்தில் உள்ளவரது விடைத்தாளை பார்த்து எழுதவோ அல்லது தனது விடைத்தாளைப் பார்த்து, பிறர் எழுத அனுமதிக்கவோ, அல்லது பறிமாறிக்கொள்ளவோ, அல்லது வாங்கவோ அல்லது அதுபோன்ற தவறான எவ்விதமான உதவி பெற முயலவோ கூடாது.

vi. தேர்வு அறையில் விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய எந்தவொரு அனுமதிக்க இயலாத வகையில் தவறாகச் செயல்படவோ, நகர் ஊரமைப்பு இயக்குநரால் நியமிக்கப்பட்ட தேர்வுப் பார்வையாளரைத் துன்புறுத்தவோ கூடாது. அவ்வாறான தவறான செயல்கள் கடுமையானதாகக் கருதப்படும் மற்றும் தண்டனை வழங்கப்படும்.

3. எழுத்துத்தேர்வுக்கான நுழைவுச்சீட்டினை விண்ணப்பதாரர்கள் www.dtcpexam.com என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நுழைவுச்சீட்டு, துறையினால் அஞ்சல் வழியாகவும் அனுப்பிவைக்கப்படும். இவ்விரண்டில் ஏதாவது ஒன்று தேர்வுக்கு அனுமதிக்கப்படும். நுழைவுச்சீட்டு இல்லாத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நகர் ஊரமைப்பு இயக்குநர்,
சென்னை-2